**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்திய வானிலைத் துறை**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை**

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(10.07.2024 முதல் 14.07.2024)**

**அறிக்கை எண் 055/2024** **தேதி.08.07.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 32°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 16°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 05.07.24 முதல் 08.07.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C to 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 62 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (05.07.2024 முதல் 08.07.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 14.07.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05/07 | 06/07 | 07/07 | 08/07 | தேதி | நாள்-1 10/07 | நாள்-2 11/07 | நாள்-3 12/07 | நாள்-4 13/07 | நாள்-5 14/07 |
| 1.2 | 5.4 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 2 | 7 | 8 |
| 34 | 34 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 33 | 33 | 32 |
| 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 24 | 23 |
| 5 | 8 | 8 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 8 | 8 |
| 80 | 87 | 93 | 91 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 70 |
| 62 | 64 | 75 | 75 | குறைந்தபட்சகாற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 50 | 40 |
| 19 | 17 | 21 | 24 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 230 | 230 | 230 | 250 | காற்று வீசும் திசை | 230 | 270 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (10.07.2024 முதல் 14.07.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 10.07.24, 12.07.24, 13.07.24 மற்றும் 14.07.24 நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **10-07-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **11-07-2024** | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **12-07-2024** | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 |
| **13-07-2024** | 6.0 | 6.0 | 5.0 | 10.0 | 5.0 | 4.0 | 6.0 | 5.0 | 4.0 | 6.0 | 5.0 | 8.0 | 9.0 | 7.0 |
| **14-07-2024** | 4.0 | 4.0 | 5.0 | 6.0 | 3.0 | 5.0 | 4.0 | 3.0 | 5.0 | 3.0 | 4.0 | 4.0 | 3.0 | 4.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குதொடர்ச்சி மழையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 26 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளவும்.<br>மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம். |
| சோளம் | வளர் பருவம் | 15 மிலி மீட்டர் மழை பெறும் பட்சத்தில் மானாவாரி சோளத்திற்கு யூரியா ஒரு ஹெக்டருக்கு 25 கிலோ என்றளவில் இடவும். |
| நிலக்கடலை | நிலம் தயாரித்தல் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வரும் பருவத்தில் நிலக்கடலை விதைக்க ஏதுவாக நிலத்தை தயார்படுத்தலாம். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும். |
| கொடி பூசணி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும். |
| வெங்காயம் | வளர் பருவம் | நிலவும் வானிலையில் வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது. கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் டைமெத்தோயேட் 1மிலி கலந்து தெளிக்கவும். |
| வாழை | வளர்பருவம் | வேக காற்றினை கருத்தில் கொண்டு மணிக்கு 10 -26 கிமீ வரை வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| மரவள்ளி | கிழங்கு பருக்கும் பருவம் | மரவள்ளி கிழங்கின் பருமனை அதிகப்படுத்த மண் ஈரத்தைப் பொருத்து தண்ணீர் பாய்ச்சவும். தண்ணீர் பாய்ச்சுவதன் மூலம் மண்ணின் வெப்ப நிலை குறைந்து கிழங்கு பருமன் அடைகிறது. |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் சாதகமான வானிலையினைப் பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும். |
| கால்நடைகள் | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினைப் போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடியினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடிவீக்க நோய் வராமல் தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

- வேக காற்றினை கருத்தில் கொண்டு மணிக்கு 10 -26 கிமீ வரை வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**